


ஂ
சங்கரார்ப்பணம்



அய்யன்பட்டி அருள்மிகு ராஜரிஷி பரமஞான குருபிரான்

# சங்கரசுவாமி

அவர்களின்

## 84வது ஆண்டு குருபூசை அன்னதானம்

# அழைப்பிதழ்

அய்யன் திருவள்ளுவர் 2057-ம் ஆண்டு மீனம் திங்கள் (பங்குனி மாதம்)
16ம் நாள் (30-03-2026) திங்கட்கிழமை மகம் நட்சத்திரம், திருச்செந்தூர்

**உலக அறிவார்ந்தோர் இயற்கை ஞானசபை அறக்கட்டளை**

WORLD INTELLIGENCE NATURE GNANAM SOCIETY ® WINGS

பதிவு எண் 140 /4/2000
ஞானசபை சாலை, சிவத்தையாபுரம் - 628 251, தூத்துக்குடி மாவட்டம்
இணையதளம் முகவரி : www.wingsmeditation.com
மின்அஞ்சல் : contactus@wingsmeditation.com



## அய்யன்பட்டி அருள்மிகு ராஜரிஷி பரமஞான

# குருபிரான் சங்கரசுவாமிகள்

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள — திருக்குறள் : 241

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானஞ் சிவபோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே. — திருமந்திரம்

**திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தியம்பதியில் சச்சிதானந்த சொரூபியாய் சமாதி ஆலயம் பெற்று சத்து சித்து ஆனந்த சொரூபியாய் அடியார்களுக்கு அருள்புரிந்து வரும் சங்கரசுவாமிகளின் 84 வது ஆண்டு குருபூசை நிகழும் திருவள்ளுவர் 2057ம் ஆண்டு மீனம் திங்கள் (பங்குனி மாதம்) 16ம் நாள் (30.3.2026) திங்கட்கிழமை அன்று மகம் நட்சத்திரத்தில் நடைபெறும்.**





அய்யன்பட்டி அருள்மிகு ராஜரிஷி
**சங்கரசுவாமி அவர்களின்**
குருவழிப் பரம்பரை தோன்றல்
ஆன்மீக குண்டலினி ஞான திருவடி தீட்சை அருளும்
உலக அறிவார்ந்தோர் இயற்கை ஞானசபை அறக்கட்டளை நிறுவனத் தலைவர்
ஞானவள்ளல், மகாகனம்

# தங்கசுவாமிகள்

காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா கார சிவ
போக மெனும்பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிட நாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்கு சேரவாருஞ் சகத்தீரே

என பேரின்ப பெருவாழ்வு வாழ உலக அறிவார்ந்தோர்
இயற்கை ஞானசபை உங்களை அழைக்கிறது.

® **உலக அறிவார்ந்தோர் இயற்கை ஞானசபை அறக்கட்டளை**

WINGS

பதிவு எண் 140 /4/2000
ஞானசபை சாலை, சிவத்தையாபுரம் – 628 251, தூத்துக்குடி மாவட்டம்
இணையதளம் முகவரி : www.wingsmeditation.com
மின்அஞ்சல் : contactus@wingsmeditation.com

## உலக அறிவார்ந்தோர் இயற்கை ஞான சபை

**World Intelligence Nature Gnanam Society (WINGS)**

### ஞான சபை நிகழ்ச்சிகள்

சீர்மிகு சிவத்தையாபுரத்தில் ஞானசபை சாலையில் ஞானசபை அமைந்துள்ளது. பிரதி ஞாயிறு மாலை 5 மணி அளவில் திருவடி ஞான தீட்சை பெற்றவர்களுக்கு சமாராதனையும், ஆன்மீக அருளுரைகளும் அருளப்படும். சென்னை, மேல்மருவத்தூர், மதுரை, திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கூட்டாம்புளி, உமரிக்காடு போன்ற பெருநகரங்களில் இயங்கும் ஞானசபை கிளைகளை தலைமை இடமான சீர்மிகு சித்தையாபுரத்தில் உள்ள ஞான சபையை நிர்வகிக்கிறது.

ஆன்மீக தாகம் உள்ள அன்பர்களே
பிரதி மாதம் பௌர்ணமி இரவு அன்று திருச்செந்தூரில்
ராஜரிஷி, பரமஞான குருபிரான்

**அய்யன்பட்டி சங்கரசுவாமி அவர்களின்**

சமாதி ஆலயத்தில்
உலக அறிவார்ந்தோர் இயற்கை ஞான சபையின்
நிறுவனர் தலைவர்
சங்கரசுவாமிகளின் குரு வழி பரம்பரை தோன்றல்
ஞானவள்ளல் மகாகனம்

## தங்கசுவாமிகள்

அவர்களின் மெய்அருட்தொண்டர்களும் அவர்களை நாடி வரும் அன்பர்களும் அருளை அள்ளிப்பருக வாரீர் வாரீர் என அன்போடு அழைக்கின்றோம்.



## ஞானத்தின் சிறப்பு

**“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு”**

என அய்யன் திருவள்ளுவர் கூறியது போல் உலகெங்கும் தோன்றிய அத்தனை மொழிகளுக்கும் அகரம் முதன்மையானது. அதுபோல் ஆதியென்ற பரம்பொருளும் சக்தி, சிவன் என்று பகுக்கப்பட்டவன் ஆவான். பகவானை அடைந்திட உலகில் நால்வகை மார்க்கங்களை வகுத்தனர் முன்னோர். சரியை என்றும், கிரியை என்றும், யோகம் என்றும், ஞானம் என்றும் வகுத்தனர்.

**“விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்**
**அரும்பு, மலர், காய், கனி போல் அன்றோ பராபரமே”**

என்று சிவஞானச் செல்வர் தாயுமான சுவாமிகளும் நால்வகை மார்க்கமும் அவைகளின் பலன்களையும் அருமையாக கூறிச் சென்றார்.

**“சரியைக்கு அரும்புக்குரிய பலனும்**
**கிரியைக்கு மலர்க்குரிய பலனும்**
**யோகத்திற்கு காய்க்குரிய பலனும்**
**ஞானத்திற்கு கனிக்குரிய பலனும்”** உண்டென்பர்

இவைகளை விரிக்கிற் பெருகும். அதனால் இத்துடன் நிறுத்துவோம்.

**“சரியையின் றொழிலினாலும் சற்கிரியையினும் யோகம்**
**புரிதரு முயற்சியானும் பொருந்தொணா தென்பர் மேலோர்**
**உரிய தேசிக னுரைக்கும் ஒருமொழி உண்மை யாலே**
**அரிய மெய்ஞ் ஞானவீடு இங்கு அடைவது திண்ணமாமே”**

என்று “நிஷ்டானுபூதி சாரம்” என்னும் ஞானநூல் வரையறுத்துக் கூறுவது நியாயம் தானே. ‘‘ஒழிவிலொடுக்கம்’’ என்னும் வேதாந்தநூல் சரியைக் கழட்டி என்றும் “கிரியைக்கழட்டி” என்றும் “யோகக் கழட்டி” என்றும் கூறி ஞானத்தைக் கனியென்பதால் சுகித்துச்சுவைக்க வேண்டியதால் அதை மட்டும் கூறாமல் சென்றார். ஆதலால் அனுபவத்தால் தெரிவதே ஞானம் என்பதை சொல்லாமல் சொல்லிச் சென்றார்.

**‘‘இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு’’**

– திருக்குறள்

உலகில் நல்வினை, தீவினை என்ற இருவினைகள் உண்டு. நல்வினை ஆற்றின் நல்லவர்களாகவும் தீவினை ஆற்றின் அதற்கொப்ப தீவினையாளராகவும், பிறவியெனும் இருளில் கிடந்துழல்வர். எவ்வினையும் சேரா இறைத்தன்மையுடைய ஞானிகளுக்கு மட்டும் பிறவியென்னும் இருள் கிடையாது என்று அய்யன் திருவள்ளுவர் கூறுவது சிந்திக்கக் கூடியது தானே.

**‘‘கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி’’**

– திருக்குறள்

இம்மக்கட் பிறப்பின் கண்ணே உபதேச மொழிகளை அனுபவமுடைய தேசிகன்பாற் கேட்டு அதனால் மெய்ப்பொருளை உணர்ந்தவர் மீண்டும் இப்பிறப்பின்கண் வாராத நெறியை எய்துவர் என்று அய்யன் திருவள்ளுவர் மேலும் கூறுவராயினார்.

ஆண்டவனிடத்தில் அறுதியிட்டு உறுதியிட்டு கேட்க வேண்டுமானால் “வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை” என்று கேட்பதும் அய்யனின் அருமையான அறைகூவல் தானே.



உலக அறிவார்ந்தோர்
இயற்கை ஞானசபை

அறக்கட்டளையின் நிறுவனர் தலைவர் :
ஞானவள்ளல் மகாகனம்

# தங்கசுவாமிகள்

WINGS

தலைமையகம் :
உலக அறிவார்ந்தோர்
இயற்கை ஞான சபை அறக்கட்டளை
ஞானசபை சாலை,
சிவத்தையாபுரம் – 628 251.
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு. இந்தியா.

இணையதளம் முகவரி : www.wingsmeditation.com
இமெயில் : contactus@wingsmeditation.com



ஞானசபைக் கிளை
திருநெல்வேலி

தலைவர்
கனம்பொருந்திய
Dr. C. **பொன்ராஜ்** M.S.
நாகர்கோவில் ரோடு,
புதிய பேருந்து நிலையம் அருகில்
திருநெல்வேலி

**அருள்மிகு அய்யன்பட்டி சங்கரசுவாமிகளின் ஒடுக்கத்திற்கு செல்லும் வழி**

**அருள்மிகு திருச்செந்தூர் முருகன் கோயில் சூரசம்ஹார மேடைக்குத் தென்புறம் அய்யா வைகுண்டவாசர் நாராயணசுவாமி கோயிலுக்கு மேல்புறம் அமைந்துள்ளது.**



"கட்டறத் துறந்தே யுயிர் பொருட் சார்பை
கருதிடும் வாசனையனைத்தும்
ஒட்டற விடுத்து ஞானநூல் அனைத்தும்
ஓர்ந்திடில் என்பயன் உதவும்
எட்டுதற்கரிய சற்குரு அருளால் இயம்பும்
ஓர் மொழியினைப் பெற்றே
நிட்டை சாதித்தே சகல கேவலங்கள்
நீங்கிடில் பிறப்பு இறப்பு அறுமே"

ஆம் உலகம் உய்வடைய "நிஷ்டானுபூதி சாரம்" கூறும் கருத்தே உண்மையான கருத்து. பிறவிப்பிணி அகல பெரியவர்கள் வழி நடந்து பவப்பிணி போக்கி என்றும் அழியாத இன்ப வாழ்வை அடைந்திடுவோம்.

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா கார சிவ
போக மெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய் கிடக்குதையோ இன்புற்றிட நாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்கு சேரவாரும் சகத்தீரே"

என்று தாயுமான சுவாமிகள் அழைப்பது போல் **"உலக அறிவார்ந்தோர் இயற்கை ஞானசபையும்"** உங்களை பேரின்பப் பெருவாழ்வு வாழ அழைக்கிறது.

**"ALWAYS IN ALL WAYS MAINTAINING AWARENESS IN THOUGHTS, WORDS AND DEEDS"**

**"MAY ALL OF US ENJOY THE ETERNAL BLISS "**

## அறிந்தோர் உணர்வர்! உணர்ந்தோர் அறிவர்!

இலக்கை நோக்கி பயணிப்பவனே இலட்சியவாதியாம் நல்ல
குணம்கொண்ட அவனின் மனமொழி மெய்யோ
சிந்தாமல் சிதறாமல் குவிந்து நிற்கும்
இலக்கினை அடைந்திட அவன் உடல் பசி
நினைத்திடான் செவிக்குணவை சேர்த்துக்
கொள்வான் நல்ல குணாதீத நிலையடைய
இலக்கினை விட்டு எள்ளளவோ எள்முனையளவோ மாற
மாட்டான் செவி கசக்கும் சொற்பொறுப்பான்
தன் கருமமே பெரிதென நினைத்திடுவான்
இலக்கினை அடையும் வரை பக்கத்தில் பழமிருந்தாலும்
பாலோடு தேனிருந்தாலும் உண்ணாது நோற்றலிலே
தலைப்பட்டு வெற்றிக்கனி பறித்திடுவான்.

இருட்க்கதவை உடைத்தெறிய
இளம்பருதி தோன்றியது போல்
மருட்க்கதவை உடைத்தெறியப்
பிண்டாதித்தன் திருச்சீரலைவாய்
அருகே அமர்ந்து அருட் கதிர்வீச்சால்
அருளாளர்களையும் பொருளாளர்களையும்
காத்தருளி அருட்பார்வையால்
நம் சிந்தை அணு ஒவ்வொன்றையும்
சிலிர்க்க வைப்பான்.

- ஞானவள்ளல் மகாகனம்

**தங்கசுவாமிகள்**





ஞானசபைக் கிளை
உடமரிக்காடு

ஏரல் மெயின்ரோடு, உடமரிக்காடு
தூத்துக்குடி மாவட்டம் - 628 151.



ஞானசபைக் கிளை
மதுரை அரும்பனூர்

பாண்டியன் நகர், புதூர்ரோடு,
அரும்பனூர், மதுரை - 625 104.



ஞானசபைக் கிளை
திருவாரூர்

A.W.கார்டன், வாசன்நகர்,
திருவாரூர் - 610 001.



ஞானசபைக் கிளை
தூத்துக்குடி

பிளாட் எண். 7 கணேசன் காலனி
கோல்டன்நகர் தூத்துக்குடி- 8.





**தலைமையகம்**

நிறுவனர், தலைவர்
ஞான வள்ளல்
மகாகனம் **தங்கசுவாமிகள்**
உலக அறிவார்ந்தோர் இயற்கை ஞானசபை
சிவத்தையாபுரம் - 628 251.
செல் : 94420 56071

**ஞானசபைக் கிளை**
**மேல்மருவத்தூர்**

சோத்துப்பாக்கம், பூங்காநகர்,
மேல்மருவத்தூர் - 603 319





**ஞானசபைக் கிளை**
**சென்னை மாதனாங்குப்பம்**

மாதனாங்குப்பம், கொளத்தூர்,
கலெக்டர் நகர், சென்னை - 600 099.

**ஞானசபைக் கிளை**
**கூட்டாம்புளி**

கோல்டன் நகர், கூட்டாம்புளி,
புதுக்கோட்டை மெயின்ரோடு - 628 103.



வாழ்க ! ⦿ வளர்க !

சங்கரார்ப்பணம்
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
அய்யன்பட்டி அருள்மிகு
ராஜரிஷி பரமஞான குருபிரான்

# சங்கரசுவாமி களின்

## 84 -வது ஆண்டு குருபூசை அன்னதானம்

**நிகழ்ச்சி நிரல்**

நிகழும் அய்யன் திருவள்ளுவர் 2057 ஆண்டு மீனம் திங்கள் (பங்குனி மாதம்) 16ம் நாள் (30-3-2026) திங்கட்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 7.00 மணிக்கு | : | **தியானம்** |
| காலை 9.00 மணிக்கு | : | **ஞானசபை கொடியேற்றுதல்** |
| மதியம் 12.00 மணிக்கு | : | **குடமுழுக்கு விழா** |
| மதியம் 1.00 மணிக்கு | : | **தீப ஆராதனை** |
| மதியம் 1.30 மணிக்கு | : | **அன்னதானம்** |
| மதியம் 3.00 மணிக்கு | : | **கூட்டுத் தியானம்** |
| மதியம் 3.30 மணிக்கு | : | **சற்குரு அருளாசி வழங்குதல்** |
| இரவு 8.00 மணிக்கு | : | **ஞானவள்ளல் மகாகனம் தங்கசுவாமி அவர்களின் முன்னிலையில் திருக்கூட்டத்தினரின் ஆன்மீக குண்டலினி ஞான உயிர் உய்வடையும் ஆய்வு பற்றிய விளக்கக்கூட்டம்** நடைபெறும். |
| இரவு 9.00 மணிக்கு | : | **திருக்கூட்டத்தினரின் சமாராதனை** |

## சங்கரார்ப்பணம்

## சங்கர சுவாமிகளின் அற்புதங்கள்

காமியத் தவம் காமியம் ஒன்றையும்
கருதிடாத்தவம் என்றும்
பூமியில் தவம் இருவகை சித்தியும்
போதமும் தரும் மைந்தா
ஆம் இவற்றில் ஒன்று இயற்றினார்
ஒன்றையே அடைவர் இது தீர்வை
யாம் உரைத்த அவ் இரண்டையும்
இயற்றினார் அன்றுள்ள பெரியோரே.

–கைவல்லிய நவநீதம்
(சந்தேகம் தெளிதல் படலம் – 45)

தவமோ இருவகையாகும் ஒன்று காமியத்தவம் என்பர் மற்றொன்று நிட்காமியத்தவம் என்பர். காமியத்தவம் என்பது ஒரு பலனைப்பெற விரும்பிச் செய்யும் தவமாகும். நிட்காமியத்தவம் என்பது ஒரு பலனையும் இச்சியாது செய்யும் தவமாகும். இவற்றில் காமியத்தவம் அட்டமாசித்திகளைத் தரும் நிட்காமியத்தவம் முத்தியை மட்டுமே தரும். இவற்றில் ஒன்றையியற்றுவோர் ஒன்றையே பெறுவர். ஆனால் பேரான்மஆற்றல் பெற்ற ஞானிகள் இருவிதத் தவங்களையும் இயற்றினபடியால் சித்தி, முத்தி இரண்டையும் அடைந்தார்கள். பேரான்மப் பெரியோரான பரமஞான குருபிரான் ராஜரிஷி அய்யன்பட்டி சங்கரசுவாமிகள் அவர்கள் திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) எனும் திருச்செம்பதியில் ஜீவசமாதி ஆலயம் பெற்று அருள் பாலித்து வருகிறார்கள். அவர்கள் இப்புவியில் தேகசஞ்சாரமும் தேச சஞ்சாரமும் செய்த காலத்தில் நடந்த அற்புதங்கள் இதோ,



## சங்கரசுவாமிகள் குருபூஜைக்கு அன்பளிப்பு அனுப்பும் அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

ஞானவள்ளல் மகாகனம்
**தங்கசுவாமிகள்**
அன்னம் இல்லம், புளிய நகர்,
சாயர்புரம் அஞ்சலகம் – 628 251
தூத்துக்குடி மாவட்டம்.
கைத்தொலைபேசி எண் 94420 56071

### ACCOUNT DETAILS

Bank : Central Bank of India
Trust Name : WORLD INTELLIGENCE NATURE GNANAM SOCIETY
A/C No. : 2201394435
IFSC : CBIN0280927

WORLD INTELLIGENCE NAT
11529845@cbin

குறிப்பு :
**வங்கிகளில் நன்கொடை அளித்தவர்கள் மேற்கண்ட கைபேசி எண்களில் தகவல் தெரிவிக்கலாம்.**

## சங்கரார்ப்பணம்

"வாழ்நாளாம் கடிகாரம் தனக்குச்சாவி வழங்குவது
ஒரு காலே ஒரு கால் கண்டீர் கோணாக
அம்முள்நிற்பது இன்றோ என்றோ குறித்துரைக்க
அதற்குள் கண்டடைவீர் குருவைத்தேடி"

வழிபடு மெய்ஞ்ஞானம் வாய்க்கும்
வழியது கேளாய்
சுழினை என்று அவ்விடம்
கண்ணும் கருத்தும்
விழிவைக்கும் சாதகத்தால்
ஆண்டொன்று தப்பாமல்
சாதிக்கில் பேதகமொன்றில்லை பிடி.

**– ராஜரிஷி பரமஞான குருபிரான்**
**அய்யன்பட்டி சங்கரசுவாமிகள்**

"கையற வில்லாத கண்புருவப்பூட்டு
கண்டுகளி கொண்டு திறந்துண்டு நடு நாட்டு"

**– திரு அருட்பா**

"வித்தகமாகப் பலகலை பயின்றும்
மேவுநற் பயன்களை யறிந்தும்
தத்துவ முழுதுங் கசடற வுணர்ந்து
தன்னிலை யறிவதற் கரிதாம்
சுத்த மெய்ஞ் ஞானதேசிகன் மகிழ்ந்தே
சொல்லாமற் சொல்லுமோர் மொழியாம்
முத்திரை மோன நிலையினாலன்றி
முத்தியின் நிலைகிடையாதே"

**– நிட்டானுபூதி சாரம்**







1. பிரபல பீடிச்சக்கரவர்த்தி சொக்கலால் ராம்சேட் பீடி அதிபர் அவர்கள் பல ஆண்டுகள் பிள்ளைகள் இன்றித் தவித்தாராம். ஒருமுறை சங்கரசுவாமிகள் முக்கூடல் வழியாக பாப்பாக்குடிக்கு வழிநடையாகச் சென்றார்களாம். அப்போது சங்கரசுவாமிகளை நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து வணங்கினாராம், சொக்கலால் பீடி அதிபர். தன்னுடைய குறைகளை சுவாமிகளிடம் வேண்டிக் கொண்டாராம். சுவாமிகள் அருகில் இருந்த சிறிய பாறையில் ஒரு கைப்பிடி அளவு விபூதியை எடுத்து வைத்து இதை உன் மனைவியிடம் எடுத்துக்கொடு. ஒரு பையன் பிறப்பான் என்றார்களாம். அவரும் விபூதியை மனைவியிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னாராம். சுவாமிகள் கூறியபடி ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதுவே ஹரிராம் சேட் என்று கூறப்பட்ட சகலகலா வல்லவர் என்பது நாடே அறியும்.



2. நெல்லை குறுக்குத்துறை என்ற பகுதியில் இருந்து சுமார் 65 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் பக்தை சுவாமிகளைத் தரிசனம் செய்ய வருவதுண்டு. அந்த அம்மாவின் பெயரோ செல்லம்மாள், அவர்கள் வாயிலாக கூறிய விபரம், செல்லம்மா இளமைப் பிராயத்தில் நெல்லை குறுக்குத்துறையில் வசித்த காலத்தில் அந்த அம்மா வீட்டில் தங்கித்தான் சுவாமிகள் நித்திரை கொள்வார்களாம். ஒரு நாள் செல்லம்மாள் நினைத்தார்களாம் நாம் சுவாமிகளிடம் சேர்ந்தால் சுவாமிகளைப் போல அறிவான பிள்ளை பிறக்குமே என நினைத்து சுவாமிகள் நித்திரை கொண்ட கட்டில் அருகே சென்றார்களாம். சுவாமிகள் கட்டில் நடுவில் தஞ்சாவூர் பொம்மையைப் போல சிறிய உருவமாக மாறி செல்லம்மா கண்களுக்கு காட்சி அளித்தார்களாம். செல்லம்மா பயந்து அருகில் உள்ள ஒரு ஆளைக் கூட்டி வந்து இந்த அற்புதத்தைக் காட்டினார்களாம்.ஆனால் அந்த நபர் பார்க்கும் போது சுவாமிகள் கட்டிலில் அயர்ந்த நித்திரை செய்தார்களாம். செல்லம்மா மனம் திருந்தி வாழ்நாள் முழுவதும் சுவாமிகளின் பக்தையாகவே இருந்து வந்தார்களாம். அது அந்த அம்மாவே தனது 65வது வயதில் மனம் நெகிழ்ந்து கூறிய செய்தியாகும்.







7. சங்கரசுவாமிகள் சமாதி ஆலயம் பெறுவதற்கு மூன்று மாதங்கட்கு முன் திருச்செந்தூர் ரத வீதிகளில் ஆனந்தக் களிப்பில் பாடியதை அப்போதைய போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சுவாமிகள் குடித்துவிட்டு ஆட்டம் போடுவதாக நினைத்து சுவாமிகளை ஆபாசமாக பேசியும், சவுக்கால் பலமுறை அடித்தும் துன்புறுத்தியிருக்கிறார். சுவாமிகளோ அடியை வாங்கிக் கொண்டு சிரித்துக்கொண்டே ஆத்தா உன்னை சாப்பிட்டு விட்டாடா என்று கூறி சென்று விட்டாராம். சுவாமிகளை அடித்த சப் இன்ஸ்பெக்டர் மறுநாளே வைசூரியால் பாதித்து எட்டே நாளில் மரணமடைந்து விட்டாராம். இந்த செய்தியால் திருச்செந்தூர் மக்களே ஆச்சரியப்பட்டு விட்டார்களாம்.

"பொறுமையாற் பிராரத்துவத்தைப் புசிக்குநாட் செய்த கன்மம்
மறுமையிற் றொடர்ந்திடாமல் மாண்டுபோம் வழியேதென்னிற்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்த பாவத்தைக் கொள்வர்
அறிபவர் அறிந்து பூசித்து அறமெல்லாம் பறித்துண்பாரே"


என்ற கைவல்லிய நவநீதத்தின் கருத்து பரமஞான குருபிரானாகிய சங்கரசுவாமிகளுக்கும் பொருத்தமாக இருக்கிறதல்லவா. குணமென்னும் குன்றேறி நின்றவர்களின் வெகுளியின் வெப்பத்தையும் பார்க்க முடிகிறது. ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரான ஞானிகள் பவப்பிணி மாறும் வகையும் புலப்படுகிறதல்லவா?




6. நெல்லை கெருடலிங்க நாடார் அவர்களும் திருச்செந்தூர் சன்னதித்தெரு தளவரிசை விஸ்வநாதபிள்ளை அவர்களும் சங்கரசுவாமிகளிடம் மேலான பக்தி செலுத்தி வந்தனர். ஒரு நாள் கெருடலிங்க நாடாரும், விஸ்வநாதபிள்ளையும் திருச்செந்தூர் முருகப்பெருமான் கோவிலில் சர்க்கரைப் பொங்கல் இடுவதற்காக, விஸ்வநாதபிள்ளை அவர்கள் வீட்டின் மூலையிலுள்ள வெங்கல உருளியை எடுத்து தலையில் வைத்துக் கொண்டு, சர்க்கரைப் பொங்கலுக்கு வேண்டிய பொருட்களையும் வாங்கிக் கொண்டு கோயில் சன்னதித் தெருவில் நடந்து வந்து கொண்டிருந்தார்களாம். அப்போது சங்கரசுவாமிகள் வேகமாக ஓடிவந்து விஸ்வநாதபிள்ளை தலைமேல் உள்ள வெங்கல உருளியை கீழே தள்ளி விட்டார்களாம். சுவாமி இப்படிச் செய்துவிட்டார்களே என்று ஆச்சரியத்தில் இருக்கும் போதே அந்த வெங்கல உருளி உள்ளே இருந்து ஒரு நல்ல பாம்பு படமெடுத்து ஓடியதாம். பெரிய ஆபத்தில் இருந்து நம்மைசுவாமிகள் காப்பாற்றி விட்டார்கள் என்று இருவரும் நடுரோட்டில் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினார்களாம். இப்படி சுவாமிகள் செய்த அற்புதங்களை எழுதிக்கொண்டே போகலாம்.







3. பாரதத்தை வெள்ளையர்கள் ஆண்டு வந்த காலத்தில் சங்கர சுவாமிகள் பாளையங்கோட்டை ஊசிக்கோபுரம் அருகில் செல்லும்போது வெள்ளைக்கார பாதிரியார் ஒருவர் சுவாமிகளை அழைத்து தாங்கள் எங்கள் ஏசு சுவாமிகள் போல அற்புதம் செய்தால்தான் நம்புவோம் அல்லது தாங்கள் ஆசாமியே என்று கூற, சுவாமிகளும் என்ன அற்புதம் செய்ய வேண்டும் என்று கேட்க, பாதிரியார் அவர்களை அருகில் நின்ற தென்னை மரத்தில் உள்ள இளநீரில் உயிருள்ள மீன்களைக் காட்ட முடியுமா? என கேட்க, சுவாமிகளும் அப்படியே செய்கிறேன் என்று அருகில் உள்ள தென்னையில் உள்ள இளநீரை வெட்டி எடுத்து பாத்திரத்தில் விட அதில் மூன்று மீன்குஞ்சுகள் நீந்தியது. உடனே பாதிரியார் சுவாமிகளிடம் மன்னிப்பு கோரியதுடன், Really you are a Saint? (உண்மையில் தாங்கள் ஒரு மகானே) என்று கூறி வழி அனுப்பி வைத்தார்.



4. ஏரல் தாமிரபரணி ஆற்றங்கரையில் சங்கரசுவாமிகளை சில துன்மார்க்கர்கள் அடித்து கிணற்றில் தூக்கிப்போட்டு விட்டார்கள். ஆனால் சுவாமிகளோ சில மணித்துளிகளில் ஏரல் பஜாரில் திரு நடனம் புரிந்தார்கள். யாவரும் ஆச்சரியப்பட்டு மகிழ்ந்தார்கள். ஆனால் துன்மார்க்கரோ மறுநாள் சுவாமிகளை அழித்துவிட தீர்மானித்தனர். சுவாமிகள் தாமிரபரணி ஆற்று மணலில் படுத்து அறிதுயில் கொண்டனர். சுவாமிகள் அருகில் சுமார் ஒன்பது பேர் படுத்திருந்தனர். துன்மார்க்கர்கள் சுவாமிகளை பார்க்கையில் அந்த ஒன்பது பேர் அருகிலும் ஒன்பது சங்கர சுவாமிகள் படுத்திருந்தார்கள். துன்மார்க்கரோ பயந்து பீதி அடைந்து ஓடிவிட்டார்கள். இதுபோல நினைத்தாலே இனிக்கும் நெஞ்சமெல்லாம் மணக்கும் சம்பவங்கள் ஏராளம் உண்டு.







5. சுவாமிகள் தேச சஞ்சாரமும் தேக சஞ்சாரம் செய்யும் காலத்தில் அவர்களோடு எத்தனையோ அன்பர்கள் பழகினர். அவர்களில் ஒரு அன்பர் புளியநகரில் வசித்த ஐயன்கண் தேவர் அவர்களும் ஒருவர். ஒரு முறை ஆத்தூர் பஜாரில் சுவாமிகளோடு ஐயன்கண் தேவர் அவர்களும் நடந்து சென்றார்களாம். அப்போது அவர்கள் அருகே காண்போரைக் கவரக்கூடிய ஒரு அழகிய மங்கை நின்று கொண்டிருந்தாளாம். தேவர் அவளை அடைய விரும்பினாராம். இதைக்கண்ட சுவாமிகள் தேவர் அவர்களிடம் நீ அருகில் உள்ள தென்னந்தோப்புக்குப்போ என்றார்களாம். தேவர் அவர்களும் உடனே சுவாமிகள் கூறிய தென்னந்தோப்புக்குச் சென்றார்களாம். என்ன ஆச்சரியம் பஜாரில் பார்த்த அதே அழகிய மங்கை தென்னந்தோப்பு நடுவில் நின்றிருந்தாளாம். தேவரோ, இவள் மோகினி பேயோ! என அதிர்ச்சியடைந்து உடனே சுவாமிகளிடம் ஓடி வந்து விபரம் கூறினார்களாம். சுவாமிகளோ நல்லவேளை, ஓடி வந்தாய், பிழைத்துக் கொண்டாய் என முதுகில் தட்டிக்கொடுத்தாராம். மாயைகளிடம் மயங்கி விடாதே என்று சுவாமிகள் தனக்கு வேண்டியவர்களிடம் அடிக்கடி எச்சரிக்கை செய்வார்களாம். அதில் இதுவும் ஒன்று.